Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

**R.V.பந்தல் சேவை**

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12762) விநாயகர் வீதி. மயிலிட்டி.

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-31 | 16-09-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-211



தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவின் முதல் நாளான நேற்று அவரின் திருவுருவப்படத்திற்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினார்.

## தியாக தீபம் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

## தமிழர் தாயகமெங்கும் உணர்வுபூர்வமாக ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்கள்)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வின் முதல் நாள் நிகழ்வுகள்நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகின.

நினைவு நிகழ்வுகள் தமிழீழ அரசியல்துறையில் நேற்றுக் காலை 9.55 மணிக்கு பொதுச்சுடரேற்றி தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது. நிகழ்வின்,

பொதுச்சுடரினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் மாவீரர் நினைவுச் சின்னத்திற்கும் மலர் மாலை அணிவித்தார்.அடுத்து தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு அமெரிக்காவிலிருந்து வருகைதந்த இருதய சிகிச்சை நிபுணர் சுடரேற்றி வைக்க, அரசியல்துறைப்பொறுப்பாளர் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.தொடர்ந்து பொறுப்பாளர்களும் போராளிகளும் பொதுமக்களும் மலர்வணக்கம் செலுத்தினர். நிகழ்வில் நினைவுரையினை தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா நிகழ்த்தினார்.

லெப்.கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு முதல் நாள் நினைவுநிகழ்வுகள் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை நடுவப்பணியகத்தில் நேற்றுக் காலை 9.55 மணியளவில்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

# யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு கடும் எதிர்ப்பு!

## புலிகள் நன்மையடைந்துவிட்டதாக இந்தியப் பாதுகாப்புத்துறைக் குழுவிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

**சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு சிறிலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள இந்தியப்பாதுகாப்புத்துறை பயிற்சிக்கல்லூரியின் குழுவினருடன் இது குறித்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க உரையாடினார். அலோக் ஜெயின் மற்றும் டி.கே. திவானி தலைமையிலான இந்தியக்குழு சிறிலங்கா வந்துள்ளது.

இக்குழுவிடம் பேசிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க, யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூலம் தமிழீழ விடுதலைப்புலி

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வான்படை காவலரண் மீது திருமலையில் கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை நகரிலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் அநுராதபுரச் சந்தியில் உள்ள சிறிலங்கா வான்படையின் காவலரண் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்றிரவு 8.05 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இக் கைக்குண்டுத் தாக்குதலில் எதுவிதமான சேதங்களும் ஏற்படாத போதிலும், அபயபுரம், லிங்கநகர் போன்ற பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவுவதாகவும், இக் கைக்குண்டு வீச்சையடுத்து இராணுவத்தினரால் ஊர்திகளில் வரும் தமிழ் மக்கள் மீது சோதனை என்ற போர்வையில் கடும் கெடுபிடி நடத்தப்படுவதாகவும் எமது திருமலைச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

## சனாதிபதியின் கடிதத்திற்கு பதிலளிக்கத் தேவையில்லை

### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி வேட்பாளராக தற்போதுவரை உள்ள மகிந்த ராஜபக்ஷவின் ஜே. வி.பி, ஹெல உறுமய ஆதரவு ஒப்பந்தங்கள் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விமர்சனக் கடிதத்திற்கு மகிந்த ராஜபக்ஷ பதிலளிக்க வேண்டியதில்லையென மகிந்தவின் தேர்தல் பணி ஏற்பாட்டாளர் மங்கள சமர வீர தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் செல்லும்முன்பாக பொதுக்கட்டமைப்பு, அதிகாரப்பரவலாக்கம் குறித்தும்,மகிந்த -ஜே.வி.பி ஒப்பந்தம் குறித்தும் சந்திரிகா கடிதம் அனுப்பியிருந்தார். அதில் மகிந்தவின் செயற்பாடுகள் கட்சியின் ஒழுங்கை மீறுவதாகவும் சந்திரிகா

(IV ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் கொழும்பு நகர கட்டளைத் தளபதி மீது விசாரணை!

(கொழும்பு)

கொழும்புநகர இராணுவ கட்டளைத்தளபதியாக பணியாற்றிய வஜிர விஜய வர்த்தனவின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மீது இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நிதிச் செயற்றிட்டத்தை விமர்சிக்கிறது சர்.நா.நிதியம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் சிறிலங்கா அரசாங்கத்தின் நிதி செயற்றிட்டத்தை விமர்சித்துள்ளது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட நாட்டில் அரசாங்கம் வரி விதிப்புகளை உரிய முறையில் செயற்படுத்தாமை காரணமாக பாரிய எதிர்விளைவுகள் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.


அரசாங்கத்தின் நிவாரணங்கள் மற்றும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் என்பன இலங்கையின் நிதியோட்டத்தை பாதிக்கும் நகர்வுகள் என அந்த நிதியம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே வரவு -செலவு திட்டத்தின் கீழ் 20 பில்லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டுள்ளன.

(IV ஆம் பக்கம் பார்க்க)

**தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.**

**— தியாகி லெப்.கேணல் திலீபன்**



## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கிளி. கந்தசுவாமிகோயிலுக்கும் TRO தண்ணீர் பக்ரறிக்கும் இடையில் கறுப்புநிறக் கண்ணாடி ஒன்று 13.09.2005 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். T.P 2285812

(6708)


# சிங்கள தேசத்தைப் பாதுகாக்க முன்வரும் மகிந்தவை சனாதிபதியாக்க வேண்டும்-ஜே.வி.பி அழைப்பு

எமது நாட்டில் ஒற்றையாட்சியை ஏற்படுத்தி ஈழக்கோரிக்கையை இல்லாதொழித்து சிங்கள தேசத்தை பாதுகாப்பதாக உறுதியளித்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையே நாம் சனாதிபதியாக்க வேண்டும். இதற்கு தொழிலாளர் சமூகம் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என ஜே.வி.பி. யின் பாராளுமன்ற உறுப்பினர் பியசிரி விஜேநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் நாட்டுச் சொத்துக்களை வெளிநாட்டவருக்கு விற்பனை செய்ய முனையும் எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர் வரும் தேர்தலில் தோற்கடித்து எமதுதேசத்தை பாதுகாப்போம் என்றார்.

# சிங்கள மக்களையும் திருப்திப்படுத்தவேண்டியுள்ளது

# இதை புலிகள் உணரவேண்டுமென்கிறார் மகிந்த

சமாதான எதிர்ப்புகளுக்கு கருத்தொருமைப்பாடு அவசியம். மீண்டும் யுத்தத்திற்கு திரும்புவது எனது தேர்வு அல்ல.

தெற்கில் கருத்தொருமைப்பாடு காணப்படாவிட்டால் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண முடியாது. சமாதானப் பேச்சை நாம் மீள ஆரம்பிக்க வேண்டும். அதே நேரம் பெரும்பான்மையாகவுள்ள சிங்கள மக்களை நாம் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது என்பதை விடுதலைப் புலிகள் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். சிங்கள மக்கள் இல்லாமல் எந்த நடவடிக்கைகளையும் எங்களால் முன்னெடுக்க முடியாது. சகல கடசிகளுக்கும் இது தொடர்பான பொறுப்புண்டு. நாம் ஒன்று பட்டு புதிய அணுகுமுறையை கடைப்படிக்க வேண்டுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று சனாதிபதியானவுடன் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது குறித்து முடிவு எடுப்பதை நான் பாராளுமன்றத்திடமே விட்டு விடு வேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது விடயம் நான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவேன். அவருடன் பேசி நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையை கைக்கொள்ள வேண்டும். இரு தரப்பும் இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும். இதன் பின்னர் இறுதித் தீர்வுக்குச் செல்லலாம். இது ஏன் எம்மால் முடியாது? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.


## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா

2005 செப்ரெம்பர்-21

**இரத்ததானம் உயிர் காக்கும் உன்னத பணி**

இடம் – வீரசிங்கம் மண்டபம் நேரம் – காலை 9.00 மணி

இரத்தவங்கி – யாழ்.போதனா வைத்தியசாலை.



**உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேசசபையின் அனுசரணையுடன் கரைச்சிப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் நடாத்தப்படும் பொது அறிவுப்போட்டிப் பரீட்சை:-17.09.2005 சனிக்கிழமை.**

மேற்படி பொது அறிவுப்போட்டிப்பரீட்சை 17.09.2005ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணியிலிருந்து 10.30 மணிவரை பின்வரும் பாடசாலைப் பரீட்சை மண்டபங்களில் நடைபெறவுள்ளது. பரீட்சையில் தோற்றுவோருக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பித்தும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் தமக்கு வசதியான கீழ் குறிப்பிடப்படும் பரீட்சை மண்டபங்களில் ஏதாவதொன்றில் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை வினாத்தாள் தமிழீழ தேசிய சர்வதேச பொது விடயங்கள் மற்றும் சமகால நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

1) **கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம.**
2) **கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம.**
3) **கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம.**

வெ.குலேந்திரன்,
செயலாளர்,
கரைச்சிப்பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12826)



## நன்றி கூறுகின்றோம்..

வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு கடந்த 14.09. 2005 இல் முல்லை.மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச்சேர்த்த முல்லை.மாவட்ட எழுச்சிநாள் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற அனைத்து வகையிலும் பங்கெடுத்து பாடுபட்டுழைத்த அனைவருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

**என்றும்**
**நன்றியுணர்வுடன்**
**செயலணி,**
**தமிழ்தேசிய எழுச்சிநாள்,**
**முல்லை.மாவட்டம்.**

(சி.12854)


## மயிலிட்டிக் கடலில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம் மயிலிட்டிக் கடலில் இளைஞர் ஒருவரை ஆயுதங்களுடன் கைது செய்ததாக சிறிலங்கா கடற்படையினர் தெரிவிததுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வேலாயுதம் இராமச்சந்திரன் (வயது-19) என்ற இளைஞர் மல்லாகம் நீதி மன்ற உத்தரவின் பேரில் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வேலாயுதம் இராமச்சந்திரன் கைது செய்யப்பட்ட போது அவரிடமிருந்து ரி 56 ரக துப்பாக்கி-01 அதற்கான ரவைகளுடன் மைக்ரோ ரகப் பிஸ்டல்-01 அதற்கான ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறிலங்கா கடற்படையினர் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை சிறிலங்கா பொலிஸ் ஊடாக நீதிமன்றத்தில் இவர் ஆஜர்படுத்தப்பட்டபோது விளக்கமறியலுக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமை ,சிறுவர் உரிமைகள் பற்றி மாணவர்களுக்கு விளக்க உரை

(அலுவலகசெய்தியாளர்)

கிளி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினால் மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் பற்றிய கருத்துக்கள் வழங்கப்பட்டன.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகப்பணிப்பாளர். அருள் திரு கருணாரட்ணம் அடிகளாரினால் மேற்படி உரிமைகள் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டன.

உலகில் மனித உரிமைகள் ஏன் மீறப்படுகின்றன. என்பதையும் மக்கள் ஏன் சமததுவம் அற்று வாழ்கின்றார்கள் என்பதையும், விளக்கி அவற்றுக்கான சட்டரீதியான விளக்கங்களையும் வழங்கி, பெண்கள் உரிமைகள் பற்றி ஐ.நா வின் ஒப்பந்தம், சமூகத்தில் உள்ள பாகுபாடுகளால் மீறப்படும் உரிமை, சிறுவர் உரிமைகள் பற்றி ஐ.நா ஒப்பந்தம் மனித உரிமை பாதுகாப்பும், மேம்பாடும், இன்று மக்களை பாதிக்கும் மனிதஉரிமைகள் போன்றவற்றுக்கான விளக்கங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

மேற்படிக்கருத்துக்கள் எல்லாப் பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.


## சாவு அறிவித்தல்

### திருமதி. கந்தையா முத்தம்மா



பூநகரி மட்டுவில் நாடு கிழக்கைச்சேர்ந்த அமரர் கணபதிப்பிள்ளை கந்தையாவின் பாரியார் முத்தம்மா அவர்கள் 15. 09.2005 அதிகாலை இறைவனடி எய்தினார். அன்னார் அற்புதமலர் (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), கமலாதேவி (பூநகரி) யோகநாதன் (இந்தியா) தனபாலசிங்கம் (நேரு.கிராம சேவை அலுவலர், பூநகரி), பாரதிதாசன் (தபாலதிபர் சுண்டுக்குளி), ஸ்ரீகாந்தன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நடராசா, குணராசா, ஸ்ரீகலா, கமலோதயம், சரஸ்வதி (ஆசிரியர் புலோப்பளை R.C.) ஆகியோரின் அன்பு மாமியும் சரவணபவான் (ஆசிரியர் யாழ்), மஞ்சுளாதேவி, மங்களேஸ்வரி, திருஞானபவன், சதானந்தபவன். சுகந்தமலர், ரவீந்திரன் , புஸ்பமலர், ரமணன், ஜெகதா,கிரிஜா, தனுஜா,. சிந்துஜா, போமிலா, சர்மிலா, பிரகலா, சரண்யா, அமரர் விமலநாதன், மாவீரர் வீரவேங்கை ஆனந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.09.2005 சனிக்கிழமை (நாளை) முற்பகல் 11.00 மணியளவில் பூநகரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பிள்ளைகள்.

(6716)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**க.பொ.த. (உ/த) பரீட்சை -2005 இல் தோற்றி பின்வரும் மாணவர்கள் சிறப்பாகச்சித்தியடைந்துள்ளனர்.**

| மாணவர்பெயர் | பிரிவு | பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|---|
| மோ. மாசிலன் | உயிரியல் விஞ்ஞானம் | 3A | 01 |
| இ.துவாரதிபன் | " | 2B,C | 05 |
| வே.பவித்ரா | " | 2B,C | 07 |
| இ.சுகிர்தா | " | 3B | 08 |
| சி.ரம்ஜா | " | B,2C | 16 |
| சு.முருகதீபன் | கணிதம் | 3C | 10 |
| தே.கார்த்திகன் | " | 2C,S | 13 |
| கு.மயூரதன் | வர்த்தகம் | 2A,B | 03 |
| ச.சுதர்சன் | " | A,2B | 10 |
| தே.வேணுகோபாலன | " | 3B | 18 |
| ப.தாட்சாயினி | கலை | A,B,C | 38 |

**கல்லூரிக்குப் பெருமை சேர்த்த இம்மாணவர்களையும், இவர்களை வழிநடாத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**-கல்லூரிச் சமூகம்-**

*மு/மல்லாவி மத்திய கல்லூரி.*

(6714)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**மோ.மாசிலன்**



**கு.மயூரதன்**

கடந்த க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் எமது கல்லூரியின் மாணவர்கள் செல்வன்.மோ. மாசிலன் விஞ்ஞானப்பிரிவில் (3A) அதிவிசேட சித்திபெற்று மாவட்டத்தில் 01 ஆம் நிலையையும், செல்வன் கு.மயூரதன் 2A,B சித்திபெற்று வர்த்தகப்பிரிவில் மாவட்டத்தில் 3ஆம் நிலையையும் பெற்றுள்ளனர். இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**

(6715)





# புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் கோவில்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

**16-09-2005**

பெரிய மாவடிக்குளத்தோரம்
பிரமணப்பூ தேன்சொரிய
உரிய ஆலஞ்சோலையிலே
உறையும் விநாயகனே
பிரியமுடன் ஆட்கொண்டு
பரிந்த எம் குறைதீர்த்து
அரியவரம் தந்திடையா
ஆனைமுகா!
போற்றி!! போற்றி!!!

உலகமெலாம் உலாவரும்
வினைதீர்க்கும் விநாயகன்
விரும்பி உறைந்துள்ள
புதுக்குடியிருப்பு
விநாயகர் ஆலயத்தில்
கேட்போர்க்கு வரம் கொடுத்து
அருள் பாலித்து ஆட்கொள்ளும்
ஐந்து முகன்
இன்று தேரிலேறி
வருகிறான் வினைதீர்க்க.



## இன்று தேரில் உலாவரும் உலகளந்த பிள்ளையார்

இற்றைக்கு 500 ஆண்டுகட்கு மேலாக ஆலஞ்சோலையில் சிறுகுடிசையில் விநாயகர் வாழ்ந்து வந்தார். கற்பக அம்மையார் அருளைவியந்து கிணறு வெட்டித் திருப்பணி செய்ய அதனுள் தோன்றிய மூசிகமே இன்றும் ஆலயத்தில் உண்டு. ஆலயத்தை இடிக்க வந்த ஒல்லாந்தருக்குக் கண்கெட, விநாயகர் அருளை வியந்து திருவாசி, முகவடால் கொடுத்துச் சென்றுள்ளனர். அச்சான்றும் இன்றும் உண்டு. கற்பகத்தார் எழுதிய காணிகளும் சான்றுகளாக இருக்கின்றன.

ஆலடியில் தோன்றி அழகான கட்டடத்தில் வாழ்ந்து சித்திரத்தேரில் உலா வரும் விநாயகா! உன்னிடம் தஞ்சம் கோரிய அனைவரையும் உள்ளடக்கி ஆசித்த பெருமானே! இந்நேரம் வாழும் சமாதானத்தில் உரிமைகளைப் பெற்றுத்தர எந்நேரமும் துதிக்கின்றோம்.

**கஜமுகாசுரனை வதைத்து, தேவரை வாழவைத்தவரே! அடியார்களின் அயராத பக்தி கேட்டு அனைவருக்கும் அருள்தா! சித்திரத் தேரேறி சித்தருக்கு வரம் கொடுக்க உத்தமராய் உலாவரும் விநாயகா! உன் வரவை வேண்டி நிற்போம்!**


திருக்குமரன் புடைவை மாளிகை
முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு (சி-12785) முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.

கந்தையா களஞ்சியம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு (சி-12789)

பி.வி.ஆர்.ஜீவலறிஸ்
22 கரட் தங்க நகைகளை கைதேர்ந்த தொழில் வல்லுனர்களால் மனதைக் கவர்ந்த டிசைன்களில் செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு. (சி-12793) முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.

தெய்வம் வாணிப மாளிகை
சந்தியருகாமை, புதுக்குடியிருப்பு. (சி-12786) பேருந்து நிலையம் முன்பாக, ஒட்டுசுட்டான் சாலை, புதுக்குடியிருப்பு.

அம்மன் வணிக மாளிகை
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு (சி-12790)

ஐயன் உதிரிகள் வாணிபம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு (சி-12794)

சிவா இரும்பகம்
கட்டடப் பொருட்கள்.
மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்.
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு. (சி-12787)

மதி உணவகம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு. (சி-12791)

தாய் (ஈஸ்வரி) காகிதாகி சக மருந்தகம்
பாடசாலை உபகரணங்கள்.
மருந்து வகைகள்.
அன்பளிப்புப் பொருட்கள் விற்பனையாளர்.
(சி-12795) முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு

துரை உதிரிகள் வாணிபம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு. (சி-12788)

பிள்ளையார் புடைவை வாணிபம்
சந்தியருகாமை, புதுக்குடியிருப்பு. (சி-12792)

அழகிய தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்
பூந்தளிர் நகை மாடம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு (சி-12796)

# தியாக தீபம் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவின் ஆரம்பநாள் நிகழ்வின் போது


அரசியல்துறை நடுவப்பணியகத்தில்...


காவல்துறை நடுவப்பணியகத்தில்...


யாழ்...

# வன்னி பா.உறுப்பினர் வீட்டில் சிறிலங்கா இராணுவம் சல்லடை

(செட்டிகுளம்)

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்தின் மன்னார் வீட்டை இராணுவத்தினர் திட்டமிட்ட முறையில் சோதனை நடத்தியமைக்கு வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் முறையிட்டுள்ளார்.

மன்னார் செபஸ்ரியார் வீதி பெற்றா என்ற இடத்தில் உள்ள வினோ நோகராதலிங்கத்தின் வீட்டையே நேற்று மாலை 5.15 மணியளவில் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீட்டின் உள்ளே படுக்கையறைவரை சென்று சகல இடங்களிலும் பரிசோதனை செய்துள்ளனர். பொருட்கள், கட்டில் போன்றவற்றையும் இவர்கள் விடவில்லை. சோதனையிட வந்த இராணுவத்தினருக்கு அது பாராளுமன்ற உறுப்பினரின் வீடு என்பது நன்றாகத் தெரியும் என்றும் பாராளுமன்ற உறுப்பினரின் மனைவி தெரிவித்தும் இராணுவத்தினர் கருத்தில்கொள்ளவில்லை. தனியாக பாராளுமன்ற உறுப்பினரின் வீடு மட்டுமே சோதனைசெய்யப்பட்டு இருப்பதாகவும் இராணுவத்தினர் சோதனை நடத்திய போது பெண்கள் தனியாக வீட்டில் இருந்ததாகவும் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.இது தொடர்பாக தானும் தனது மனைவியும் மன்னார் மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழுவுக்கும் இராணுவம், பொலிசார் ஆகியோருக்கும் முறையிட்டு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்த ஜே.வி.பி.யின் வேட்பாளரேயொழிய சுதந்திரக் கட்சியின் வேட்பாளரல்ல

## —ரவி கருணாநாயக்க கிண்டல்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உண்மையான வேட்பாளர் மகிந்தராஜ பக்ஷ தானா என்று ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

அக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இது குறித்து கூறியதாவது,

சுதந்திரக்கட்சியின் சந்திரிகா குமாரதுங்க மற்றும் அநுரா பண்டார நாயக்க ஆகியோரின் மகிந்த ராஜ பக்ஷ மீதான விமர்சனங்களால் அக் கட்சி குழப்பத்தில் இருப்பது வெளியாகியுள்ளது.

கட்சியின் ஒழுங்கை மகிந்தராஜ பக்ஷ மீறியிருப்பதாக சந்திரிகா குற்றம்சாட்டியிருப்பதால் மகிந்தவுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பாராளுமன்றத் தேர்தலை சந்திரிகா நடத்த முயற்சிக்கக் கூடும்.

சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவால் மகிந்தராஜபக்ஷதான் வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டிருப்பினும் அவர் தொடர்ந்து உத்தியோகபூர்வ வேட்பாளராக இருப்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அண்மைய நிகழ்வுகளைப் பார்க்கும் போது ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் வேட்பாளராகத்தான் மகிந்தராஜபக்ஷ இருக்கக் கூடும் எனத்தெரிகிறது. சுதந்திரக் கட்சி வேட்பாளராக அவர் இருக்க மாட்டார் எனத் தெரிகிறது என்றார் ரவி கருணாநாயக்க.

## தியாகி...

ஆரம்பமானது. இந் நிகழ்வு தமிழீழ சுகாதாரசேவையைச் சேர்ந்த தமிழ்வாணன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.நல்லூரில் தியாகி திலீபன் அவர்களின் நினைவுத்தூபி அமைத்துள்ள இடத்தில் பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வு க.சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த பிரமுகர்களும் பொதுமக்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்திலும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையிலும் தியாகி திலீபனின் நினைவு தினம் மிகவும் எளிமையான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில்விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சிறீதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெருந்தொகையான மாணவர்களும் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். தென்மராட்சியில்,கொடிகாமம், சாவகச்சேரி, கைதடிப் பகுதிகளிலும் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. பொதுஅமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள் இந் நிகழ்வை தலைமையேற்று நடத்தின பெருந்தொகையான பொது மக்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி நகரில்நேற்று லெப். கேணல் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. கரைச்சி பிரதேசசபை வளாகத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் இந்நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நினைவுரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் நிகழ்த்தினார்.

அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், போராளிகள் பெருமளவில் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தியாக தீபம் லெப்கேணல் திலீபன் அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவின் முதல் நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை 9.55 மணிக்கு காவல்துறை நடுவப்பணியகத்தில் காவல்துறை நடுவப்பணியக கண்காணிப்பாளர் மாதவன் தலைமையில் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் காவல்துறை கண்காணிப்பாளர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள், உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தியாகி லெப்கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு ஆரம்ப நாள் நிகழ்வு நேற்று திருமுறிகண்டி வலயத்தில் இடம்பெற்றது.

இதில் நினைவுரைகளும் இடம் பெற்றன.முறிகண்டி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கிராம பொது அமைப்பு பிரதிநிதிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

பளைநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட பொதுப்பந்தலில தியாக தீபம் திலீபனின் நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள்,அரச,அரசசார்பற்ற நிறுவனத்தினர் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நேற்று காலை புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் தா. சண்முகநாதன் தலைமையில் தியாக தீபம் திலீபனின் நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

அக்கராயன் மாவீரர் மண்டபத்தில் லெப்-கேணல் தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டு ஆரம்ப நிகழ்வு தேசியக்எழுச்சிப் பேரவை உறுப்பினர் கிருஸ்ணா பிள்ளை தலைமையில் நடையெற்றது

(கோ,தீ,ச, 11,08, 28,ஆ)

# கப்பல் விடுவிப்பு

சோமாலியாவில் ஆயுததாரிகளால் 11 வாரங்களுக்கு முன்னர் தடுத்துவைக்கப்பட்ட உலக உணவுத் திட்டத்தின் கப்பல் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கப்பலில் பயணித்த இலங்கையின் கப்பல் தலைவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாலிங்கம், தன்சானிய பொறியியலாளர் மற்றும் 10 பணியாளர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டதாக ரொய்ட்டர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

# பிரித்தானிய பிரசை பொலிசில் சரண்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் தேடப்பட்டுவந்த பிரித்தானிய பிரசைஒருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் சரணடைந்த மைக்கல் ஸ்மித் என்ற இந்த பிரித்தானியர் பின்னர் மேலதிக விசாரணைக்காக சிறுவர் பாதுகாப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர், சிலாபம் மற்றும் மன்னார் பகுதிகளில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# சிப்பாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாள் இராணுவ முகாமில் உள்ள இராணுவச்சிப்பாய் ஒருவர் மனவிரக்தியடைந்து தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக தெரியவருகின்றது. இவர் பதுங்கு குழியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொழுதே தான்வைத்திருந்த துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.ச மீபகாலமாக படையினர் தற்கொலை செய்யும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் தெரியவருகின்றது. (28)

# கலந்துரையாடல்

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான அனைத்து மாணவர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருப்பதால் அனைவரும் கிளி.மாவட்ட புகுமுக மாணவர் ஒன்றியத்திற்கு வருகை தரும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

(தீ)

## அரசின்...

இதன்காரணமாக நாட்டின் பணவீக்கம் பாரிய அளவில் உயர்ந்துள்ளது. அதேநேரம் நாட்டின் இனப்பிரச்சினை தீர்வு பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்துள்ளமையும் நாட்டிற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

## முன்னாள்....

சிறிலங்கா முப்படைத்தளபதியான தயா சந்தகிரி தலைமையிலான இக்குழுவினர் மேஜர் ஜெனரல் லாரென்ஸ்பெர்னான்டோ, விமானப்படை தளபதி றொசான் குணதிலக்க, தளபதி ஜயந்த பெரேரா மற்றும் லெப். கேணல் டி.கப்பெடிவலன ஆகியோர் இடம் பெற்றுள்ளதாக இராணுவத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சனாதிபதி....

எச்சரித்திருந்தார். இதுதொடர்பாக ஊடகவியலாளர்களிடம் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தாவது சந்திரிகா குமாரதுங்கவின் வேட்பாளராகத் தான் மகிந்த ராஜபக்ஷ உள்ளார். அதனால் அந்தக்கடிதத்திற்கு பதிலளிக்க வேண்டியதில்லை. ஜே.வி.பி யுடனான ஒப்பந்தம் குறித்து சந்திரிகாவுக்கு விரிவாகவே விளக்கப்பட்டுள்ளது. இதில் கட்சி ஒழுங்கு மீறல் எதுவும் இல்லை என்பதை அவர் புரிந்துகொண்டுவிட்டார். அதனால் அவர் அனுப்பிய கடிதத்தை பெருட்படுத்த வேண்டியதில்லை.

## பிரதிப்...

களே பலனடைந்துள்ளனர். சிறிலங்காவின் தேசியநலன்களை கருத்தில் கொள்ளாமல் ஒரு பக்கச் சார்பாகவே இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுவிட்டது என்று கூறியுள்ளார்.

ஐ.நா. சபை உள்ளிட்ட இன்னொரு சர்வதேச அமைப்பு இனப்பிரச்சினையில் தலையிடுவதை தான் விரும்பவில்லைஎன்றும் பேச்சுவார்த்தைமேசைக்கு விடுதலைப்புலிகள் திரும்புவதற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் விக்கிரமநாயக்க வலியுறுத்தினார்.

இலங்கையில் தமிழர்களைப் பொறுத்தவரை சுதந்திரமாகத்தான் வாழுகிறார்கள். கொழும்பில் கூட அவர்கள் சுதந்திரமாகவே இருக்கிறார்கள். தேசிய விடுதலைப் போராட்டம் என்பதெல்லாம் இல்லை என்றும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது ஓய்வுபெற்ற சிறிலங்கா பாதுகாப்புத்துறை செயலாளர் அசோக ஜயவர்த்தன, முப்படைத்தளபதி தயா சந்தகிரி மற்றும் முப்படைகளின் தளபதிகள் உடனிருந்தனர்.

இந்தியக்குழுவின் சிறிலங்காவுக்கான திடீர் வரவு ஏன் என்பது குறித்தும் தற்போதைய சிக்கலான சூழலில் இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்தும் சர்வதேச நாடுகள் அவதானித்து வருகின்றன.

ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இந்தக் குரல் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடனான மகிந்த ராஜபக்ஷவின் ஒப்பந்தத்துக்கு ஆதரவுக்குரலாக வெளியிடப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆ;ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.